தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உ௰கக இரௌத்திரி ஆவணி 1980 ஆகஸ்டு - செப்டம்பர்	மலர் ரு

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியின் வளர்ச்சி

அ. ம. சத்தியமூர்த்தி, எம்,ஏ.,எம்.ஃபில்.,பி. ஜி.டிப். இன். மேனுஸ்கிரிப்ட்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு.

முன்னுரை :

பொருளிலக்கணத்தை உண்டாக்கிய ஐந்திலக்கண நூலாகத் தொல்காப்பியமே நமக்கு கிடைத்திருக்கும் முதல் நூலாகும். தொல்காப்பியத்தின் பிற அதிகாரங்களைக் காட்டிலும் பொருளதிகாரம் குறித்த ஆய்வுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வுகளின் போக்கு குறித்தும், ஆய்வு நூல்களின் வளர்ச்சிக்கான காரணங் குறித்தும் விளக்கியுரைப்பதே இக்கட்டுரையின் குறிக்கோள்,

பொருளதிகாரப் பழைய உரைகள்:

இலக்கிய நூல்களுள் திருக்குறளும், இலக்கண நூல்களுள் தொல்காப்பியமுமே மிகுந்த உரைகளையுடைய நூல்களாகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குக் கிடைக்கும் பழைய உரைகள் மூன்று. அவற்றுள் முழுமையானதாகக் கிடைப்பது இளம்பூரணர் உரையே.

பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கிடைக்கிறது. நச்சினார்க்கினியர் உரை கிடைக்காத மெய்ப்பாட்டியல், உவமயியல்: செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கும் பேராசிரியர் உரை காணப்படுகிறது.

பொருளதிகாரப் புதிய உரைகள்;

ஆபிரகாம் அருளப்பன் 'தொல்காப்பிய யாப்பு உறுப்பு, எனும் நூலை உரையுடன் கி. பி. 1968-இல் வெளியிட்டார். இதே ஆண்டில் புலவர் குழந்தை தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குக் 'குழந்தையுரை' எழுதியுள்ளார். பொருளதிகாரத்திற்கு ம. நா சோமசுந்தரம் பிள்ளை 'குறிப்புரை' யும் எழுதியுள்ளார்.

அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய வற்றிற்கு டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார்.

பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி:

நாகமணி என்பவர் தொல்காப்பியப் பொருளதிகார உரை மேற்கோள் விளக்கங்களையெல்லாம் அகர வரிசைப்படுத்தித் தொல் காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி' எனும் நூலை கி. பி. 1935-இல் வெளியிட்டார்.

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி:

தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சியுரை என்ற முறையில் முதன் முதல் முதலாகக் கி. பி. 1912-இல் மு. இராகவய்யங்காரின் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' எனும் நூல் வெளி வந்தது.

அதனையடுத்துக் கி. பி. 1927-இல் கா. சுப்பிரமணிய பிள்ளை 'பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து' என்னும் ஆய்வு நூலை வெளியிட்டார் வி. முத்துசாமி அய்யரின் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்னும் நூலும் இவ்வகையில் குறிக்கத்தக்கதே.

தொல்காப்பியர் குறித்த பொதுவான ஆய்வு நூல்களும் பொருளதிகாரம் பற்றிப் பேசுகின்றன. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரின் 'தொல்காப்பியச் செல்வம்' மு. இராமலிங்கனாரின் 'தொல்காப்பியவளம்' டாக்டர் சி. இலக்குவனாரின் 'தொல்காப்பிய ஆராய்ச்சி' தி. க. இளவழகனாரின் 'இன்ப ஒழுக்கம் அல்லது தொல்காப்பிய அகத்திணை விளக்கம்', டாக்டர் மொ. அ. துரை அரங்கனாரின் 'தொல்காப்பிய நெறி', டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் 'தொல்காப்பியப் புதுமை', க. வெள்ளைவாரணனாரின் 'தொல்காப்பியம் — தமிழிலக்கிய வரலாறு', புலவர் குழந்தையின் 'தொல்காப்பியர் தமிழர்'. புலியூர் கேசிகனின் 'தொல்காப்பிய உரையில் காதற் காட்சிகள்', சாமி சிதம்பரனாரின் 'தொல்காப்பியத் தமிழர்', அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின 'தொல்காப்பியச் சிந்தனைகள்' முதலான நூல்கள் பொருளதிகாரம் குறித்து ஆய்வு செய்யக் காணலாம்.

பொருளதிகாரப் புறத்திணை ஆராய்ச்சி:

தொல்காப்பியப் புறத்திணை யியலுக்குக் காணப்படும் பழைய உரைகள் இரண்டு. ஒன்று இளம்பூரணர் உரை; மற்றொன்று நச்சினார்க்கினியர் உரை.

பின்னர் டாக்டர் நாவலர் சோமசுந்தரபாரதியார் தொல்காப் பியப் புறத்திணையியலுக்குப் புத்துரை கண்டுள்ளார். இவ்வாறு

டாக்டர் சி. இலக்குவனார், வெள்ளைவாரணனார், டாக்டர் துரை அரங்கனார், புலவர் குழந்தை, இளவழகனார் முதலானோர் புறத்திணை யியலுக்கு ஆய்வுரை எழுதியும் உள்ளனர்.

ஆய்வுக் கட்டுரைகள் :

தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்து இதுவரை வெளி வந்த இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை பதினோரு தொகுதிகளிலும் வெளிவந்த கட்டுரை கள் பல தரம் மிக்கவை.

பொருளதிகாரம் குறித்த ஆய்வேடுகள்:

ஏ. சங்கரநாராயணனின் The concept and structure of poetry in Tolkappiyam' வி. இராஜமாணிக்கத்தின் The Social life of the Ancient Tamil people of revealed in Tolkappiyam' என்பதும் எம். லிட்., பட்ட ஆய்வேடுகளாகும்.

சி இலக்குவனாரின் 'Culture and Civilization of early Tamils with special reference to Tolkappiyam' என்பது டாக்டர் பட்ட ஆய்வேடாகும்.

இக்கட்டுரையாளனாகிய யான் எம். ஃபில். பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்தது 'தொல்காப்பிய மரபியல் — ஓர் ஆய்வு' எனும் ஆய்வேடாகும்.

கோ. கிருட்டினமூர்த்தியின் சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்ட ஆய்வான 'தொல்காப்பிய ஆராய்ச்சியின் வளர்ச்சி' என்பது முடியுந்தறுவாயில் உள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொல்காப்பியம் தொடர்பான பதிப்பு, அளவு முதலியன பற்றிய தொகுப்பு வேலை வித்துவான் ஆ. சிவலிங்கனாரிடம் அளிக்கப்பட்டு, செயல்படவும் தொடங்கிவிட்டது.

இவ்வகையில் தொல்காப்பியம் குறித்த ஆய்வு, குறிப்பாகப் பொருளதிகாரம் குறித்த ஆய்வு பல்வேறு வகையில் உருவாகி யுள்ளன. இதற்கான காரணங்களை நாம் கீழ்வருமாறு தொகுத்துக் காட்டலாம்.

1) தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழுக்கேயுரிய தனிச் சிறப்புடையது. பொருளிலக்கணம் பிறமொழிகளில் காண இயலாதது.

2) தொல்காப்பியம் தோன்றிய காலந்தொட்டு புகழோடு இயங்கி வருவதற்கு, இலக்கணம் கூறுவதில் தொல்காப்பியர் மேற் கொண்ட தழுவு நடையே காரணம் என்பது என் கருத்து ' என்று

எழுதுவார் டாக்டர் வ. சுப. மாணிக்கம்,

3) தமிழில் காணப்படும் முதல் இலக்கணம் தொல்காப்பியம் இதுவும் தொல்காப்பியத்தின் சிறப்பிற்கொரு துணைக்காரணமாக அமைகிறது.

4) ஐந்திலக்கணத்தையும் முழுமையாகக் கூறும் முதல் தமிழ் நூல் தொல்காப்பியம்.

5) தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழ் இலக்கிய மரபைப் பின்பற்றி இலக்கிய இலக்கணங் கூறுகிறது.

6) பிற இலக்கண நூல்களைவிட வடமொழி மரபைக் குறைவாகப்பெறுவது தொல்காப்பியம் இக்கருத்தும் தொல்காப்பியத்தின் நிலைபேற்றிற்குக் காரணமாக அமைகிறது.

7) பொருளதிகாரம் கொண்டு தொல்காப்பியத்தை வரலாற்று நூல் என்பர் டாக்டர் சி. இலக்குவனார்[2] இம்முதல் வரலாற்று நூல் சிறப்படைவதற்கு வேறு காரணமும் இருக்க முடியுமோ?

8) தொல்காப்பியத்தில் காணப்படும் நயம்பற்றி விளக்க வந்த டாக்டர் வ. சுப, மாணிக்கம் 'உவமை உருவங்களாலும் சொல்லாட்சிவுடை மாற்றங்களாலும், கற்பனை ஓவியர்களாலும். அறம் அறத்தின் முடிவுகளாலும் .. தொல்காப்பியம் இலக்கண விலக்கியம் என்ற புதுப்பெயர் பெறுந்தகுதியுடையது'[3] என்று எழுதுகிறார். இதன் மூலமும் தொல்காப்பியச் சிறப்பை உணரலாம்.

இவ்வாறு பலவாறாகத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் சிறப்பிற்கான காரணத்தைக் காட்டலாம் எனவே, இச்சிறப்புக்களின் காரணமாகவே இவ்விலக்கணம் பற்றிய ஆய்வும் வளர்ந்த நிலையில் காணப்படுகிறது என்று குறிப்பதும் பொருத்தமுடையதாகும்.

முடிவுரை :

இதுகாறும் தொல்காப்பிய பொருளதிகாரம் பழைய, புதிய உரைகள் முதலியன குறித்தும், பொருளதிகார ஆய்வு. ஆய்வுநிலை முற்றிலும், ஆய்வின் மிகுதி நிலைக்கான காரணங் குறித்தும் ஓரளவு சுருங்கக் கண்டோம்.

பின் குறிப்புகள்:

1. மாணிக்கம் டாக்டர் வ. சுப., தொல்காப்பியம் நிலைபெற்றது ஏன்? இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை III, அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பு வெளியீடு 1971, பக்கம் 407.

2. இலக்குவனார் டாக்டர் சி, தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, இரண்டாம் பதிப்பு, 1971 பக்:126
3. மாணிக்கம் டாக்டர் வ. சுப. தொல்காப்பியயியல், தொல்காப் பியச் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1978 பக்கம் : 66

முற்றுப்பெயரெச்சமும் முற்றுவினையெச்சமும்

டாக்டர் ஏ. ஆதித்தன், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

முற்றுக்கள் எச்சமாகச் செயல்படுவதையே முற்றெச்சம் என்பர் இலக்கணக்காரர்; குறிப்பாக வினைமுற்று அமைப்புக் கள் வினையெச்சமாகச் செயல்படுவதனையே முற்றெச்சம் எனக் குறிப்பர். தொல்காப்பியரோ முற்றெச்சம் பற்றி ஏதும் கூறினாரல்லர். ஆயினும் ''வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய (தொல்காப்பி யம் சொல்லதிகாரம் : 450)'' எனும் நூற்பாவிற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் பலரும் முற்று அமைப்புகள் எச்சமாகச் செயல் படுவதனைக் குறிக்கின்றனர்.

'மோயினள் உயிர்த்த காலை' என்புழி மொந்து ஏனும் வினை யெச்சம் 'மோயினள்' என்று முற்று வாய்பாட்டாற் திரிந்து நின்ற தேனும் வினையெச்சமேயாகல் வேண்டும் என்பர் இளம்பூரணர் (தொல்காப்பியம் சொல்லதிகாரம்: 450). ஒளிசினை வேங்கை கொய் குவம் சென்றுழி' என்புழி 'கொய்குவம்' எனும் உளப்பாட்டுத் தன்மை தெரிநிலைமுற்று எச்சமாகச் செயல்படுகின்றது என்பர் நச்சினார்க்கினியர் (தொல்காப்பபியம் சொல்லதிகாரம் : 458). மேற்கூறப்பட்ட இரு சான்றுகளையும் சுட்டி இவை வினையெச் முற்ருக வந்தன என்றும் இவற்றுள் 'மோந்து' என்பது, 'மோயினள்' எனவும் 'கொய்ய' , என்பது 'கொய்குவம்' எனவும் முற்று வாய்ப்பாட்டான் வரினும் எச்சப் பொருண்மைத்தாலின் வினையெச்சமெனப்பட்டன என்பர் தெய்வச்சிலையார் (தொல்காப் யம் சொல்லதிகாரம் : 447).

முற்றெச்சம் என்ற சொல்லாட்சி, பிற்காலத்தில் உருவாக்கப் பட்ட ஒன்றெனத் தெரியவருகின்றது. தொல்காப்பியத்தில் முற்று அமைப்புகள் எச்சமாகச் செயல்படுவதனைக் காணமுடிகின்றது.

உணர்ந்தனர் கொளலே (தொல்காப்பியம் : 117)

ஈண்டு 'உணர்த்தனர்' எனும் முற்று வடிவம் 'உணர்த்து, எனும் எச்சப்பொருண்மையில் வருகின்றது. இன்னமும் தற்கால இலக்கணக்காரர்கள் சிலர் 'செய்கென் கிளவி வினையொடு முடியினும் அவ்வியல் திரியாது என்மனார் புலவர்' (தொல்காப்பியம் சொல்லதிகாரம் : 198) எனும் நூற்பாவில் தொல்காப்பியரே செய்கு வாய்ப்பாட்டு முற்றெச்சங்களைக் குறிப்பிடுகின்றார் என்று சுட்டுகின்றனர் (கோதண்டராமன் : 1971; 2, மணிவேல் 1976. 39).

உரையாசிரியர்கள், இலக்கண அறிஞர்கள் கூற்றின்படி முற்றுவாய்ப்பாட்டால் வந்து எச்சப்பொருண்மையினை உணர்த்தும் வடிவவே முற்றெச்சம் என்பதாகும் என்று தெரிய வருகின்றது. இவர்கள் அனைவரும் தெரிநிலைவினை முற்று வினையெச்சமாகச் செயல்படுவதனையே முற்றெச்சம் என்று குறிக்கின்றனர். முற்று வடிவங்கள் வினையெச்சமாகச் செயல்ப்பட்டால் அதனை எந்தச் சொல்லாட்சியால் குறிப்பது? முற்று அமைப்புக்கள் பெயரெச்சமாகவும் செயல்படுவதனை இலக்கியங்களில் காணமுடிகிறது.

"யாரோ கேட்டாரெனின் மதுனர உப்பூரிக்குடிக்
கிழார் மகள் ஆவாள் உருத்திரசன்மன்........."

(இறையனார் களவியல் உரை: பக்கம்: 5)

ஈண்டு 'ஆவாள்' எனும் தெரிநிலை முற்றுவடிவம் 'ஆகிய' எனும் பெயரெச்சப் பொருண்மையில் செயலாற்றுகின்றது. இது போன்று பலமுற்று வடிவங்கள் பெயரெச்சமாகச் செயலாற்றுவதனைப் பண்டை இலக்கியங்களிலும் காண முடிகின்றது.

எனவே முற்று அமைப்புக்கள் வினையெச்சமமாகச் செயல்படுவதனை முற்று வினையெச்சமெனவும், பெயரெச்சமாகச் செயல்படுவதனை முற்றுப்பெயரெச்சமெனவும் குறித்தல் நலம் பயக்குமன்றோ?

உரையாசிரியர்கள் சிலர் குறிப்பு வினைமுற்றுக்கள் எச்சமாகச் செயல்படுவதனைக் குறிக்கின்றனர். கண்ணியன் வில்லன் வரும்' என்புழி 'கன்னி அனிந்து' 'வில்லை ஏந்தி' என்பன 'கண்ணியன்', 'வில்லன்' என்றும் மூஏறுவாய்பாட்டன் வரினும் எச்சப்பொருண்மைத்தகாலின் வினையெச்சமெனப்பட்டன என்பர் தெய்வச்சிலையார் (தொல்காப்பயம் சொல்லதிகாரம்: 447) நச்சினார்க்கினியரும் வினைக்குறிப்பு முற்று எச்சமாகச் செயல்படுவதனைக் குறிக்கின்றார். இதனை அடியொற்றிப் பிற்கால இலக்கவியான பவணந்தி முனிவர்

வினைமுற்றே வினையெச்சமாகலும்
குறிப்புமுற்று ஈரெச்சமாகலும் உளவே

(நன்னூல்: 351)

என நூற்பா சமைத்தார்.

குறிப்பு முற்று ஈரெச்சமாகச் செயல்படுவதற்குப் பின்வரும் சான்றுகள் தரப்பட்டுள்ளன.

'அவன் வில்லினன் வந்தான்', இத்தொடர் 'அவன் வில்லினன் ஆகி வந்தான்' எனச் செயல்படுவதாகக் கூறி, குறிப்புமுற்று வினையெச்சமாதல் காண்க என்று குறிக்கின்றார் உரை ஆசிரியர்; 'வெந்திறலினன் விறல் வழுதியோடு' என்புழி வெந்திறலினன் ஆகிய வழுதியோடு' எனப் பொருள் படுதலால் குறிப்பு முற்று பெயரெச்சமாதல் காண்க என்றும் சுட்டுகின்றார்.

தெரிநிலை வினைமுற்றுக்கள் எச்சமாகச் செயல்படும் நிலையில் அவற்றை இருவகையில் விளக்குவர் இலக்கண அறிஞர்கள்.

'கண்டனன் வணங்கினன்' இத்தொடரில் 'கண்டனன்' எனும் வடிவம் 'கண்டு' என்று பொருள் கொள்ளும் நிலையில் முற்றெச்சம் எனக் குறிக்கப்பெறுகின்றது. அடுத்து 'கண்டனன் ஆகி அல்லது ஆக வணங்கினன் என்று பொருள் கொள்ளும் நிலையில் 'கண்டனன்' என்பதனை வினையாலணையும் பெயர் என்றுதான் குறிப்பிடுகின்றனர். இதேபோன்று 'வில்லினன் ஆகி வந்தான்' எனப் பொருள் கொள்ளும் நிலையில் 'வில்லினன்' எனும் வடிவத்தை முற்றெச்சம் என்று கூறுதல் பொருந்தாதன்றோ? 'வெத்திறலினன் ஆகிய வழுதியோடு' என்னும் பொருண்மையில் செயல்படும் பொழுது'வெந்திறலினன்' எனும் வடிவம் பெயரேயன்றி முற்றெச்சமல்ல.

எனவே நன்னூலார் கூறும் 'குறிப்பு முற்று ஈரெச்சமாகும் நிலைக்கு' உரையாசிரியர் தரும் இரு சான்றுகளில் வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் செயல்படுவதாகக் குறிக்கப்பெறும் 'வில்லினன்'' 'வெந்திறலினன்' எனும் இரு வடிவங்களும் பெயர்களேயன்றி முற்றெச்சமல்ல. இந் நூற்பாவில் குறிக்கப்பெறும் 'குறிப்பு முற்றீரெச்சமாதல்' மறுபரிசீலனைக் குறியதே. என்னவோ வெனில் குறிப்பு முற்று எந்தச் சூழலிலும் எச்சமாகச் செயலாற்றுதல் இல்லை. எச்சப் பொருண்மையினை உணர்த்துவது தொக்கு வரும் வடிவமேயன்றி குறிப்பு முற்றெனக் கூறப்படும் வடிவங்கள் அல்ல.

மேற்கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து இரண்டு முடிபுகளுக்கு வரலாம்.

1. முற்று அமைப்புக்கள் வினையெச்சமாகச் செயல்படுவதனையே முற்றெச்சமாகவும் செயல்படுகின்றன. எனவே பெயரெச்சமாகச் செயல்படும் முற்று அமைப்பினை முற்றுப் பெயரெச்சமெனவும், வினையெச்சமாகச் செயல்படும் முற்று அமைப்பினை முற்றுப்

அமைப்பினை முற்று வினையெச்சமெனவும் இருவேறு சொல்லாட்சியால் குறிக்கலாம்.

2. தெரிநிலை வினைமுற்றுக்கள் வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் செயல்படுகின்றன. ஆனால் குறிப்பு முற்றுக்கள் எச்சூழலிலும் எச்சமாகச் செயல்புரிவதில்லை. குறிப்பு முற்றுக்கள் எச்சமாகச் செயல்படுவதாகக் குறிக்கப்பெறும் இடங்களிலெல்லாம் எச்சப் பெருண்மையினை, தொக்குவரும் 'ஆக', 'ஆகி', ஆகிய எனும் வடிவங்கள்தாம் உணர்த்துகின்றன. எனவே குறிப்பு முற்று எச்சமாகச் செயல்படுவதாகக் கூறும் தொல்காப்பிய உரையாசிரியர்-கள் கருத்தும், இதனை வெளிப்படையாக நூற்பா அமைத்த நன்னூலர் கருத்தும் மறுபரிசீலனைக்குரியது.

துணைநூற்பட்டியல்

1. ஆதிந்தன், ஏ., (1978) ''இலக்கண ஆய்வில் சிந்தனைக்குச் சில'' ஆய்வுக்கோவை : 10, பக். 34—38,

2. கோதண்டராமன், இரா., (1971) ''முற்றெச்சங்கள்'' செந்தமிழ், 66 : 3, பக் 1—19

3. தொல்காப்பியர், (1962) தொல்காப்பியம்-சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு.

4. ...., (1923) தொல்காப்பியம்-சொல்லதிகாரம் சேனாவரையர் உரை, கழக வெளியீடு.

5. ...., (1927) தொல்காப்பியம்-சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, சென்னை.

6. ...., (1971) தொல்காப்பியம்-சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை. கழக வெளியீடு

7. மணிவேல். மு., (1976) முற்றெச்சங்கள், மொழியியல் ஆய்வேடு, மதுரைப்பல்கலைக்கழகம்.

இக்கட்டுரை எழுதும்போது பேருதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ இசரயேல் அவர்களுக்கு நன்றி.

ஆற்றுப்படை இலக்கியம்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

தமிழ்மொழிப் பிரபந்தங்கள் தொண்ணூற்ருறு வகையிலொன்று ஆற்றுப்படையாகும். புரவலன் பரிசில்கொண்டு மீண்ட இரவலன், தான் பெற்ற பெருவளத்தை வழியில் எதிர்வந்த இரவலர்க்கு அறிவுறுத்தி, அவரும் தம்மைப் போன்று ஆங்கு சென்று, தான் பெற்ற பேற்றினை அடையுமாறு, புரவலனின் நாடு, ஊர், கொடை, வீரம், கொற்றம், புகழ் முதலியன கூறி, புரவலன்பாற் வழிபடுத்துவதே ஆற்றுப்படையாகும். (ஆறு—வழி; படை — படுத்துதல்) ஆற்றுப்படை எனும் பெயர்க் குறிப்பு தொல்காப்பியரது எச்ச இயலில்

முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மை யொடு முடியினும் வரைநிலையின்றே
ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்

என காணப்படும், ஆற்றுப்படையினைக் கூறுதற்குரியவர், பாணர், கூத்தர், பொருநர், விரலியர் என்பது கவித்துவ வழக்கு. இவர்கள் பாடிப் புகழும் பழங்கால மரபே, ஆற்றுப்படையின் அடிப்படையாகும், மற்றும் இஃது அகவற்பாவால் அமைவது அழகு மரபாகும். ஆற்றுப்படை முறை பெருவழக்காக தொல்காப்பியருக்கு முன்னர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டு மென்பது ஒரோவழி கருதவும் இடனுண்டு.

கூத்தரும் பாணரும் பொருநரும் விரலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறு அர்க்கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

என்பது தொல்காப்பியம். இதற்கு உரையாசிரியர் 'ஆடல்மாந்தரும், பாடல் பாணரும், கருவிப் பொருநரும், இவரும் பெண்பாலாகிய விறலியுமென்னும் நாற்பாலரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டு சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடு' என விளக்கம் அளித்துள்ளதிலிருந்து ஆற்றுப்படையின் அமைதியும் தோற்றமும் புலப்படும்.

தொல்காப்பியர் காலத்தில் ஆடல் மாந்தரும் பாடல் பாணரும், விறலியரும், இசைக்கருவிகளில் வல்ல பொருநரும், தாம் பயிலும் ஆடல்பாடல் போன்ற கலையின்பத்தில் மூழ்கி தன்னை மறந்து, இன்னிசையோடொன்றி, இசையின்பத்தில் துய்க்கும் நிலையாகிய கலைப்பேற்றின் வளர்ச்சியில் தம் காலம் முழுதும்

கழித்தமையின், அன்னார் பொருட்செல்வத்தைத் தேடித் துய்த்தலை கருதினரல்லர் இசுனல் இசையிற்றுறைபோகிய இத்தகையார் திசைகளெட்டும் இசைமயமாக்கி, இறையன்புடன் தன் இசைத் திறனை இன்றமிழோடு இசைத்ததால். குறுநில மன்னர்களும் கொடை வள்ளல்களும் பெரும்பாலும் அவர்கள் விரும்பிய பொருள் களை தம் ஆசை தீர நிறைய வேண்டுமளவு தந்து அன்னாரது அருள் வாழ்க்கையினை ஓம்பிக் காத்தனர்.

ஆற்றுப்படை இலக்கியம், அலைமதியிற் பூத்த அன்புமய மாகிய தமிழகத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறது. இஃது எவ்விதம் இல்லறத்தைப் பிழைக்கச் செய்கிறதென்பதையும், நெடுமுடி மன்ன றத்தையும், குறுநில மன்னறத்தையும் தழைத்துப் பொலியச் செய் கிற தென்பதையும் மக்கள்பால் அருளறத்தையும் செழித்தோங்கச் செய்கிற தென்பதையும் முழங்குகிறது. பொதுநல வாழ்வியலையும், வளமும் வகையினையும், வாழ்வின் பயனையும், ஊதிய மேம்பாட்டி னையும், இறைபால் ஒன்றும் வழியினையும்: இஃது மிளிரச் செய் கின்றது. இயற்கை வாழ்வுடன் கூடிக் குழையும் அன்புத் துடிப் புடைய உறவே ஆற்றுப்படையின் உள்ளம், அன்பு வகையால் தன்னில் அனைத்தையும், தன்னை அனைத்திலும் காணும்படி மக்க ளுக்குப் புகட்டி நல்வினைகளை: வழிமுறையால் பின்பற்றும்படி உணர்த்தி வாழ்வினை அன்பு நிலயமாகவும், அன்பு விளக்கமுமாக ஆக்குவது ஆற்றுப்படையின் இலக்கணமுமாகும்.

அன்பு வழியினைக் காட்டும் ஆற்றுப்படை, மக்களது உயர் நிலை, அன்பின் அழகு வடிவில் நிலவி நிற்பதைத் துலக்கி, அதன் இன்ப வளர்ச்சியினைப் பெருக்கும், இரக்கம், அருள், பொதுமை நலம் ஆகிய அன்பு விளக்கங்களால், ஆற்றுப்படை, அன்பின் அளவற்ற ஆற்றல்களைப் புலப்படுத்தி வாழ்வில் நேரிடும் இன்னல் களை இன்பமாக்கும் பரிசன வேதி. சாதி மதபேத வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் போக்கி மக்களது குணம் அன்பிற்கேற்ப அமையு மாறு ஆற்றுப்படை இலக்கியம் வழங்கச் செய்யும் வீறுடையது. மற்றும் இஃது மக்களது அறிவை மறைத்து அலைக்கும் பொய்யும் புனைசுருட்டும் வஞ்சகமும் பகையும் கரப்பும் ஆகிய துன்ப விகாரங் கள் வாழ்வில் நேரிடாதவாறு, மக்களை பிறர்க்கென வாழ்ந்து பிறவிப் பயனைப் பெறக்கூடிய அந்தகரண இரகசிய நியமங்களை வற்புறுத்த வல்லது. எனவே, ஆதரவோடு கூடிய அன்புடன் இணைந்து மகிழ்ந்து சுற்றம் தழுவி பலருக்கு நலம் புரியுமாறு ஆற்றும் செயலே அறமெனை வலியுறுத்துவது, ஆற்றுப்படையின் குறிக்கோளென்க. இவ்வறச் செயலால் சுயநலம் தேய்ந்தொழியு மாறு மனம் கட்டவிழ்ந்து மலர, அன்பு தழையப்பெற்று அருள்

செழித் தோங்குகிறது. இவ்வகையால் அன்பும் அருளும்கொண்டு ஆருயிர் மீது தயைப் பெருகச் செய்ய, பலனைக் கருதா நலனே உலகின்கண் நிலைபெறுதல் கண்கூடு. இதனை வழிபாடாக வழங்கச் செய்வது ஆற்றுப்படையின் நோக்கமாகும். ஆகவே அன்பினால் ஆருயிர்களுக்கு கருணை பொழிந்து நிற்பதை போதிக்க வல்லது ஆற்றுப்படையின் குறிப்பொருளென்பது அறியப்பெற்றும்.

சங்ககாலச் சமுதாயத்துப் பொருளாதார வாழ்வில், இரக்க வுணர்வினை வருவிப்பதாய 'ஈத்துய்' என்ற பண்பு முதன்மையாய் விளங்கி அதனால் மன்னுயிர்கள் புரக்கப்படும் அருள்நிலை புலனும். இவ்வருள் நிலை, நாசமுறும் பாச அன்பிற்படாது பதியன்பில் பொலிவுறுமாறுமாதலால், மக்கள் தனக்கென வாழாது இறை யுணர்வுடன் பிறர்க்கென வாழத்தலைப்படுவர். இத்தகைய வாழ்வின் அன்பின் நெறிவழி, முறையாக இயலுமிடத்து, ஈதல் இயல்பினை விளக்கும் ஆற்றுப்படை இலக்கியம் உதயமாகிறது. இஃதே மக்களிடத்து அருள் நிலவுமாறு ஈகை ஒப்புரவு முதலியவற்றால், அறவினையினை ஓம்பச் செய்து அன்புடையார் தழுவும் பொது நெறியினையும் உணர்வொழுக்கங்களையும் வகுத்தோதும் மாட்சியினைப் பெற்றதாகிறது. உயிர் வாழ்க்கை நலனும் பயனும் கொள்ளுமாறு, ஆற்றுப்படை இலக்கியம் கள்ளமில் உள்ளத்து அன்பிற்கு ஒரு நிலைப்பினை அளித்து, அன்பால் அறம் விளங்கும் வகையினையும். அறத்தால் அருள் விளங்கும் தகைமையினையும், அருளால் அறிவு விளங்கும் மேம்பாட்டினையும், அறிவால் உண்மை இன்பம் இறைத்தத்துவ மதியொடு இலங்கும் பான்மையினையும் எடுத்துரைக்கவல்லதாய்த் திகழ்வதாயிற்று. மற்றும் ஆற்றுப்படை இலக்கியம் கலையுணர்விற்கு நாகரிகவளனையும் நலனையும் பயந்து புகழ் கொள்ளும் வகையில் மக்களுக்கு நல் வாழ்வளித்து வழங்குவதாயிற்று

ஆற்றுப்படை இலக்கியம் உலகின்கண் நிலவும் வறுமைத் துயரினைப் போக்கி அருளுணர்வுடன் மாசிலாத சமுதாயத்தை உருவாக்கி அமைதி நலத்துடன் பொருளையும் அறிவையும் வழங்கச் செய்யும் கலைப்பணியைப் பெருக்கி செவ்விய அறத்தினை நிலை நாட்டும். அன்பு நிலவும் சமத்துவ வாழ்வைப் பண்படுத்தி நிலை பெறச் செய்கிறது. சமத்துவ வாழ்வில் யெருளும், அன்பின் கதிராகிய அருளும் சார்ந்திருக்கும் வகையினைப் புலப்படுத்தி, ஆன்மநேய உணர்வின் உண்மையின்பத்தைப் பொலியச் செய்கிறது எனவே ஆற்றுபபடை இலக்கியம் உண்மையாய் அன் பொளியினைத் துலக்கும் அருள்வாழ்வின் இலக்கணமாகும், அருளறி

வுடைய வாழ்வின் இலக்கணமாகும், அருளறிவுடைய வாழ்வின் விளக்கத்தால் விண்ணரசும் எளிதென்பதையும் ஆற்றுப்படை இலக்கியம் புகட்டுவது நுணித்துணர்ந்து கொள்ளப்படும்.

ஆற்றுப்படை இலக்கியம், ஒன்றுகூடியிராத கல்வி அறிவு நிலையினையும, திருச்செல்வநிலையினையும் ('திருவேறு தெள்ளியரா -தலும் வேறு' - வள்ளுவர்) ஒருசேர இணைத்து சமுதாயத்துப் பெருளாதார பண்பாட்டு நலங்களையும், வாழ்விற்கு இன்றியமை யாத உணவு, உடை, உறையுள் முதலாய வசதிகளையும் அளிக்கும் மாண்புடையது. உணவின்றி உடலின் மெலிவோடு வறுமையுற்று வாழும் புலமைக்கலை நலமுடைய ஏழை எளியவர்களது ஏழைமை நிலையும் எளிமை நிலையும் நீக்கி, ஓரளவு கொடைமடமுடையவர் பால் நிறைநிலையெய்திட, அன்னாரைத் தலைவராகப் பாடும் ஆற்றுப் படைத்துறை சிறப்பிடம் பெற்றுள்ளது.

எனவே ஆற்றுப்படை இலக்கியம் கொடையுள்ளம் வாய்ந்த ஒப்புரவாளராய செல்வர்பால் பரிசில் பெற்ருெருவர், பெறவிழை யும் மற்றவருக்கு வழிகாட்டும் இயல்பின் வழக்கம், தமிழகத்துப் பண்டைய நடைமுறையினைப் புலப்படுத்தும் பான்மை தெளியப் படும். மற்றும் இவ்விலக்கியம், வறுமைப்பிணி உடலகத்தே தோன்றி அறிவு கெடாது பரிசில் பெறுவோரது நிலை மூலம், அன்னாரது அருமை பெருமையினை பதிந்து வரையாது பொருளீயும் வள்ளல் களின் சிறப்பியல்பினையும் புகழினையும்வாழ்த்தும் வகையில் உலகின் கண் இன்றுவரை நிலைநிறுத்தி காட்டியுள்ளது அறியப்படும்.

ஆற்றுப்படையின் அமைப்பில், தொல்காப்பியர் காலத்துப் பரிசிலர் இரந்து திற்பாரல்லர்: தன் தனித் தன்மையைப் போற்றி நிறுவுவர்: பெட்பின்றி ஈதலை விரும்பார்: 'பெரிதே உலகம், அதினில் பேணுவர் பலரே' என பெருமிதத்தினைப் பெரிதும் காப்பவர்: ஈயா ராயினும், நல்லறிவுள்ள செல்வச் சிறப்புடையார்பால் வேற்றுமை யின்றி நெருக்கமாக உறவாடி பல்காலும் பழகும் பண்புடையாளர்: பெருஞ்செல்வத்தை வியக்கும் வாணிகப் பரிசிலரல்லர். இதனுன் அவரது மனவியல்பின் புதுமையும் பெருமிதமுப் வாழ்வியலும் நனகு புலனும்

ஆகவே ஆற்றுப்படைப் பாடல்களில் செய்கடனறிந்து ஒளித் தலின்லாது உதவும் சீருடைச் செல்வர்களிடம் செல்லும் புலவர்கள், அன்னாரது பெருந்தன்மையினை உளமார உண்மைபட புகழ்வரே யன்றி, தமது அறிவாற்றலை அழியச் செய்யும் எளிமை நிலை மையினை அழுங்கிய நெஞ்சத்துடன் தாங்கனே புகலுதலில்லையென்

பது காணப்படும். மற்றும் அச்செல்வர்கள், தம் கேளிர் போன்று வரும் புலவர்களது மானமறிந்தும், சிறுமையினைக் காணுதும் அன்னாரது நிலையில் இயல்பாக எழும் செம்மையழகில் தங்களது நன்றுடைச் செல்வம் தழைப்பதனைக் கருதி, அன்னாருடன் உயிரன்பின் அடிப்படையில் உறவு பூண்டு உள்ளம் குளிர அவர்களது வறுமையினைப் பெருமிதத்துடன் கடிது நீக்கிப் பயன்படுவர். இத்தகைய அன்பு பிரவிய மனச்செம்மை நிலை தொல்காப்பிய காலத்துச் சான்றோர்பால் சிறிதும் குன்றாதிருந்தது சிறப்பாக அறியப்படும். எனவே, ஆற்றுப்படை இலக்கியம், காவலரையும் பாவலரையும், புரவலரையும், இரவலரையும் அன்பாலும் அருளாலும், கருணைப் பண்பாலும், நண்பாலும் இணைத்து வைக்கும் அருமையும் பெருமையும் கொண்டுள்ள பெற்றிமையினையுடையது.

ஆனால் புறநானூற்றுக்காலத்து ஆற்றுப்படை பாக்களில் பரிசிலரது பதங்குலைக்கும் பசிக்கொடுமையால் விளைந்த யாக்கையின் மெலிவு, நைந்து கிழிபட்டது இலை உடுத்தியிருத்தல், தமது ஒக்கல் வறுமைத் துன்பத்தால் தளர்ந்து வருந்துதல், வரியநிலைக்குரிய நெடுவழியின் நடைத்துயர் முதலாயவற்றை அடிப்படையாகக் கொண்டு நுவலப்படும் செய்திகளாக கூறப்பட்டுள்ளதினை, நாகரிக நெஞ்சினரும், மக்கட் பண்புடையாரும் ஏற்ற செயலென இசையார். இத்தகைய வறுமை நிலை தங்காலத்துப் புலவர்கள்பால் நிலவியதைக் கண்டுள்ள பெருங்குன்றூர்கிழார், மிகு அவலத்துடன், தன்பாலும் வருந்தி வாடும்படி வந்துள்ளதை உன்னி

‘ பொறி புணருடம் பிற்றோன்றி யென்
அறிவு கெடா நின்ற நல்கூர்மையே ’

(புறம் 266)

என ஐம் பொறிகளும் பயன்கொள்ளும்படி குறைவின்றிப் பொருந்திய தனது யாக்கையில், அவற்றால்தான் பயனுறாதவாறு தன் அறிவு கெட நிலை பெற்றமிடித் துன்பத்தியலை விளித்துள்ளதைக் காண்க.

ஆற்றுப் படுத்தல் மூலம் வள்ளல்பால் பொன்னும் பொருளும் பெற்று மீண்டும் வறுமை நிலைக்குரிய துன்பமும் துயருமுமெய்துதல் வழி செல்வ நிலையாமை, யாக்கை இளமை நிலையாமை முதலாயவற்றைக் கண்டுணர்ந்த புலவர் பெருமக்கள், பொருளைப் பரிசிலாகப் பெறுவதைவிட, இறைபால் துன்பத் துயரைத் துடைக்கும் அருளைப் பரிசிலாகப் பெறும் வேட்கையினை உணர்ந்தனர்: வள்ளியோரது கடைத்தலையினை நாடி அன்னாரைப் பாடி பொருள் தேட வேண்டிய நிலையினை வெறுத்தனர். அரசு செல்வத்தைக் காட்டிலும்

அருட்செல்வம் நிலைபேறுடையதாயிருக்கும் சிறப்பினை உணர்ந்து, விரிந்த சிந்தனையுடைய புலவர் பெருமக்களது, ஆற்றுப்படைத்துறை யமைப்பில் இறைவனது (இருபெருந் தெய்வங்களாகிய திருமுருகன் —திருமுருகாற்றுப்படை; திருமால் பரிபாடல் 4) புகழை விரித்துப் பாட முற்படுவராயினர், இழிவாழ்வினின்றும் பரிசிலர்களின் எண்ணத்து இயல்புகளையும் நிலைகளையும் திருப்பி, அத்தகைய வாழ்வு தராத உணர்வுகளை அன்னவருக்குத் தூண்ட ஒழுக்க நுணுக்கங் களைப் புகட்டும் செம்பொருளாகிய முருகியல் உணர்வை ஆற்றுப படையின்கண் ஊடுருவச் செய்தனர்.

(தொடரும்)

மங்கல மடந்தை - கண்ணகி

சி. கோ. தெய்வநாயகம், M A., M.Phil., B Sc., Dip-in-Agri. Cert-in-Epi. Cert-in-Ling.

[துணர்: ருச மலர்: ச பக்கம் 98 தொடர்ச்சி]

10: 0

சிலப்பதிகாரக் கால முதல், இன்றளவும் கணவனொடு கூடிய மங்கலப் பெண்ணாகவே கண்ணகியார் 'மங்கல தேவி' எனும் பெயரில் வணங்கப்படுவதை, மேற்கு மலைத் தொடரில் (நெடுவேள் குன்றில்) கண்ணகிக் கோட்டமாம் மங்கல தேவிக் கோட்டத்தினைக் கடந்த 1963-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி கண்டுபிடித்து தமிழுலகிற்கு அறிமுகப்படுத்திய பேராசிரியர் சி கோவிந்தராசனார் அவர்களது வரலாற்று ஆய்வும் ஈண்டு கண்ணகியாரை மங்கல மடத்தையாகவே

"இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம்
இல்லையாதலால் தெய்வங் கொண்டு"

நம் முன்னோர் வணங்கிய பத்தினி வணக்கத்தினை நினைவுறுத்துவதாம்,

காப்பிய மங்கலம்

இறந்துபட்ட கணவனை மீட்டு, அமரர்க்கரசனே கண்ணகியார்க்கு அளித்து, அவரை கணவனோடு கூடிய மங்கலப் பெண்ணாகவே வானுலகு அழைத்துச் சென்றனன். இத்தகைய பீடு வேறெவர்க்கு வாய்க்க முடியும்? இக்காட்சிகளைக் குன்றக்குரவர்கள் நேரிற்

கண்ட காட்சியினூற்றான் ''சிலப்பதிகாரக் கரு'' வளரலாயிற்று. கண்ணகிக்கு இறந்த கணவனை மீண்டும் பெற்று மங்கலப் பெண்ணாகவே உம்பருலகு புகுந்த காட்சியே குன்றக்குரவர்களை கண்ணகி வழிபாட்டிற்கு அதுவும் '' மங்க மடந்தை '' வணக்கத்திற்கு ஆட்படுத்திற்று.

'' குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவர் ஒருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட் புலங்காண விட்புலம் போயது
இறும்பூது போலு மஃதறிந்தரு ளீயென '' (பதி: 1-9)

என்ற பதிகத் தொடக்கமும்,

'' யெழுநா ளிரட்டி யெல்லை சென்றபின்
றொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திப்
பீடுகெழு நங்கை பெரும் பெயரேத்தி
வாடா மாமலர் மாரி பெய்தாங்
கமரர்க் கரசன் நமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு
வான வூர்தி யேறினள் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானென் ''
(12 : 193 - 200)

என்ற கட்டுரைக் காதைத் தொடர்களும், இக்கருத்தினை நன்கு விளக்குகின்றன.

குறுங்காலப் பிரிவே !

கோவலன் பிரிவு ஒரு குருங்காலப் பிரிவே என்பதனை அடிகள் கண்ணகியாரின் வாய்மொழியாகவே குன்றக் குரவையுள் குன்றக் குறவர், கண்ணகியார் உரையாடலாக அழகுறப் புலப்படுத்துகிறார்.

குன்றக் குறவர் :

'' குருவியோப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச் சென்று வைகி
அறுவியாடியுந் சுனை குடைந்தும், மலவுற்று வருவேமுன்
மலைவேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர் ! மதிதநெங்க
முலை இழந்து வந்து நின்றீர்! யாவீரோ ?

கண்ணகியார் (முளியாமல்)

" மண மதுரையோ டரசுகேடுறவல்வினைவந் துருத்தக்காலைக்
கணவனை அங்கு இழந்து போந்த கருவினையேன்யான் "

இச் செஞ்சொற் செப்பினால் மனம் கசிந்து, கண்ணகியாரை

" இறைஞ்சி யஞ்சியினை வளைக்கை யெதிர் கூப்பி "
நின்ற குன்றவர் மனம் இறும்பூ தெய்துமாறு,

" கண்ணகித் தெய்வத்தினை வானவரு நெடுமாரி மலர்
பொழிந்து குன்றவருங் கண்டு நிற்பக் கொழுநனொடு
கொண்டு போயினர் "

கண்ணகியாரின் கூற்றுவழி கோவலனை அங்கு (மதுரையில்) இழந்து காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன் என்ற சூளுரைக் கொப்ப மதுரைப் பாண்டியனை வழக்கின் வென்று எரி கொளுவி யழித்து, காய்ச்சினந் தனிந்த நிலையில். கற்புக்கடம் பூண்ட பத்தினித் தெய்வமாக, குன்றவர் கண்டு மகிழ, வானவர் போற்ற கோவலனோடு கூடிய மங்கலப் பெண்ணாகவே கண்ணகி வானுலகம் புக்கார் இப்பெற்றியினாற்றான் கண்ணகியாரை மக்கள் வணங்கி வழிபடும் சிறப்புருவாயிற்றெனலாம்.

எத்திறத்தானும் வரந்தருவள்

" ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் " என்ற கோள் சிலம்பின் கோள்.

" வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் தேரானாகி
யூர் காப்பாளரைக் கூவி ஈங்கென்
றாழ்பூங் கோதைதைத் தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையதாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு என "

(16: 148 - 153)

என்ற பாண்டியன் சித்திர மா டத்துத் துஞ்சிய நன்மாறன் ?" ஊழ்வினையும்,

" மண்ணக மடந்தை வான்துயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை யூழ்வினை யுருந்தென் "

(16 : 215 - 217)

என்ற கோவலனது ஊழ்வினையும், சிலப்பதிகாரத்தின் வினையூழ்க ளாகும். இவ்வூழ்களின்றேல் சிலம்பின் அதிகாரம் தமிழிற்கில்லை.

பல்லாவுட்பட்ட தாயினைக் குழக்கன்று நாடிக் கோடும் வல்லாண்மையொத்த ஊழ் மாற்ற வொண்ணாதது. இது குறித்தே அருமறையாளர்

" ஊழிற் பெருவலி யாவுள "

என சித்தாந்தம் செப்புவர். திருமறையாளரோ

" ஊழையும் உப்பக்கம் காண்குவர் ஒய்வின்றி
தாளா துஞற்று பவர் "

எனப் பெருமறை புகன்றனர்.

இப்பெருமைக்கோர் — ஒன்றல்ல — ஒரே சான்றுடன் கண்ணகியார்.

தத்தம் ஊழ்வினையை உப் பக்கம் காண்மார் பற்றித்தான் பொய்யில் புலவர் புகன்றனர். கண்ணகியாரோ பிறர்தம் ஊழ்வினை களையும் மாற்றி அவர்களும் பெருமையுறச் செய்யும் கற்புக் கடம் பூண்ட அருந்தெய்வமாக விளங்கினர்

இதனை நோரகத்தாமே தம் கண்ணாரக்கண்ட காட்சியினு லேயே குன்றக்குரவர்,

" இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லையாதலிற்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே "

(24: 10—12)

எனத் தெய்வமாகக் கொண்டனர்.

ஊழ்வினைகொண்டு இழிவுற்று அரைசியல் பிழைத்து

" வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நீத்துச் செங் கோலாக்கினும் "

இழித்துரைக்கப்பெற்ற பாண்டியனைப் பெருமையுறச் செய் பவர் கண்ணகியாரே.

வாழ்த்துக் காதையில்

" தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினன் நானவன் தன்மகள் "

எனத் தன் பொருட்டு, தன் தந்தை போன்ற பாண்டியன், தன்னால் இறுதியுற்றதால் தேவர்கோனுக்கு நல்விருந்தாயின பெற்றினையும் கண்ணகியாரே தம் அருளிச் செயலாகக் குறிப்பிடுகின்றார்.

வாழ்துக்காதையின் தென்னவன் தன்மகள் (29:வ.ம.சொல்)

பாண்டியன் தன்மகள் (29: வ. ம. சொல்)

'' வானவனை — வாழ்த்துவோம் நாமாக வ்வையயார்
கோமானை வாழ்த்து வாள் தேவ மகள் ''
(29: ஆ. சொல்)

என்ற தொடர்களும் இக்கருத்துக்களை அரண் செய்கின்றன.

சிங்கப்புரத்துச் சங்கமனுக்கு இழைத்த வினை, ஊழ்வினையாக உருத்து, யாழின் மேலுருத்து, சூழ்வினைச் சிலம்புவழிக் கோவலனை, ஊழ்வினை உருத்த பாண்டியன் ஆணையால் வீழ்த்திற்று கோவலன் இறந்தனன்.

சீறிய கற்பு

இறந்த கோவலனை மீண்டும் உயிர்ப்படையச் செய்யும் கற்புத் திறமும் கண்ணகியல்லால் வேறெவர்க்கும் வாய்க்காவொன்று. கணவனை இழந்த செய்தி கேட்டு அலமரும் கண்ணகி,

'' மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே யீதொன்று
காதற் கணவனைக் கண்டாலவன் வாயிற்
தீதறு நல்லுரை கேட்பனே யீதொன்று '' (19: 9—12)

என ஊர்சூழ்வரியில், இறந்தவனை உயிர்ப்பெறச் செய்யவும் அவன் வாய் பேசுமாறு செய்யவும் கூடிய தம் கற்பின் ஆற்றலை மடவார் பலர் முன் நிகழ்த்திக் காட்டிட சூளுரைக்கின்றார்,

கம்பலை மாக்கள் பலர் இறந்துகிடந்த கோவலனைக் கண்ணகி யார்க்குக் காட்டினர். இதனை

'' கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாற் கண்டாளைத் தான் காணான் ''
[19: 29 - 30]

என இளங்கோ காட்டுகின்றார். அக்கம்பலை மக்களிடையே அமுத ரற்றிய கண்ணகிமுன்

'' கணவன் றன்
பொன்னுஞ்சி மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள
நின்றானெழுந்து நிறைமதி வாண்முகங்
கன்றிய தென்றவன் கண்ணீர் கையால் மாற்ற ''
(19 . 60—64)

எனுந் தொடர்கள் வழி கோவலன் உயிர்பெற்றெழுந்து கண்ணகியிடம், " நிறைந்த மதி போலும், ஒளி பொருந்திய முகங் கன்றியதே யென்று வாக்கால் கூறி, கையாலே அவள் கண்ணீரை மாற்றினன், " (அடி) கண்ணகி கீழ்விழ்ந்து கோவலனின் திருவடிகளைத் தம் துணை வளைகையாற் பற்றினள்.

> " பழுதொழிந்து எழுந்திருந்தான், பல்லமரர் குழாத்துள்ளான்
> எழுதெழின் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனான் ."
> (19: 66—67)

என்ற அடிகளின் மொழிக்கொப்ப,

பிணமான தன்மை யொழிந்து (கோவலன்) நின்றான். கண்ணகியை, " நீ இருக்க " (அடி) என்று கூறி, (அரு) அமரருடன் சென்றனன்.

மதுரையினை எரித்த வீரபத்தினி முன் (பின்னர்) மதுரை மாதெய்வம் தோன்றி, ஊழ்வினை வலி கூறி, கண்ணகியாரின் காய்சினந் தவிர்த்தனள், பின்னர் கோவலனைக் கண்ணகி மீண்டும் கண்டு சேரும் நாளையும், நிலையினையும் கூறுகின்றாள் அதன்பின் கண்ணகி

> " கருத்துறு கணவற் கண்டபி னல்லது
> திருத்துஞ் இல்லே னிற்றலு மிலனென "

எனக்கூறிச் சென்று நெடுவேள் குன்றம் அடைந்தார். மலைமீது இந்திரன் கோவலனைக் காட்டிட, அவனொடு மங்கலப் பெண்ணாகவே வானுலகம் புக்கார். இங்ஙனம் செயற்றிறத்தாலும் மங்கல மடந்தையாகவே, மங்கலந்தரும் மடந்தைத் தெய்வமாகவே கண்ணகியார் விளங்குகின்றார்.

கண்ணகியாரின் மங்கலநாண்:

அடுத்து கண்ணகியாரின் மங்கலத் தகுதிக்குரிய சான்று அவரது மங்கலவணியே யாகும். மங்கலவணி இதுதான் என்று நாம் நிலை நாட்டிப் பொருண்மை காட்ட வேண்டிய சூழல், இன்றைய சிலப்பதிகார ஆய்வுகளுக்கிடையே அவசியமாகிவிட்டது என் செய்வது? சிலம்பு தொடர்ந்து புலம்புகிறது.

சிலப்பதிகாரத்தில் ' தாலி ' கூறப்படுகின்றதா? சிலம்பாய்நர் இவ்வினாவாய்வினை எதிர்கொள வேண்டியுளது. ஒரு சாராய்நர் " இல்லை " கண்டுள்ள அகாலமும் சிலம்பு பெற்றாகத்தான் வேண்டியுள்ளது. " இல்லை என்ற ஒன்று உண்டு " என்பதனை இவண் நாட்டலாம்.

17, 1: 0

மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகி கோவலன் திருமணம் கூறப்படுகின்றது. திருமண நிகழ்ச்சிகளை அடுத்து அடுத்து கூறுகின்ற அடிகள்,

''முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம் வெண்குடை
அரசெழுததோர் படியெழுந்தன '' அகலுள் மங்கல அணி யெழுந்தது
(1: 46—47)

என 'மங்கல அணி' பற்றிய குறிப்பினைத் தந்தார். இதற்கு அடியார்க்கு நல்லார்.

'' மங்கல வணி ஊரெங்கும் எழுந்ததென்க ''
அகலுள்—தெருவுமாம் ''

எனவுரை காண்பார், அரும்பதவுரைக்காரரோ மேலுந் தெளிவாக

''ஊரிலே மாங்கலிய சூத்திரம் வலஞ்செய்தது'' எனவுரைப்பார்.

இப்பொருண்மைகளை ஒருசேர நோக்கினல் மங்கலப் பொருள்களாகிய, மஞ்சள், குங்குமம், ஆடி, பூ, சந்தனம், கூறை முதலிய மங்கலப் பொருள்களோடு அட்சதை அரிசிப் பூமலர்க் கொத்தொடு, தாலியும் தாலத்தில் வைக்கப் பெற்றுச் சான்ரோரின் வாழ்த்துதற்கு கொணரப்படும் திறத்தினை ஏற்க வேண்டியுள்ளது.

மாமறைப் பார்ப்பார் மறைவழி காட்டிட, மணமக்கள் தீவலம் வருகின்ற திருமணத்தில் தாலியாகிய ''மங்கலவணி யெழுதல் '' என்பது இன்று நிலவும் வழக்கமே.

1: 1

மனையறம் படுத்த காதையில் இளங்கோ, கண்ணகியார் தாலி அணிந்திருந்த செவ்வியினைத் தெளிவாகக் குறிப்பிடுவார். உலவாக் கட்டுரை பல பாராட்டிக் கண்ணகியாரைப் புகழும் கோவலன்

'' மறுவின் மங்கல அணியே யன்றியும்
பிறிதணி அணியப் பெற்றதை எவன்கொல்?
(2: 63...64)

ஏனைப் பெண்டிராயின் ஆடை அணிகலன்கள் பூண்டு அழகு பெற்றவராகத் திகழலாம். ஆயின் அழகிற்கழகாகத் திகழும் கண்ணகியே நீ மங்கலவணி மட்டும் அணிந்திருந்தால் போதாதா? ஏனை அணிகலன்கள் அணிந்திருக்கின்றமையின் நினது அழகு கூடிற்று எனலாமா? இயற்கையான நின்னழகிற்கு ஒப்பான அழகும் இவ்வுலகினிலே உண்டா? எனப் புகழ்கின்ருன்

1: 2

எப்பெண்களும் அமையாத இயற்கையழகு மிகப் பெற்றவர் கண்ணகியாராவார், இதனைக் கொலைக்களக் காதையில் மாதரி கூற்றாக,

" கூடல் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோல மொடு வந்தீர் (16: 9—11)

என்று அடிகள் கூறுவர்.

கண்ணகியார் அணிகலன் அணியாத நிலையிலும் அவர்தம் இயற்கையழகுக்கு முன், அணிகலன் அணிந்த ஏனைப் பெண்டிரழகு அழிந்து போகிறது. அத்தகு அழகு நிரம்பிய கண்ணகியார் தாம் குற்றமில்லாத மங்கலவணி அணிந்திருப்பதாகக் கோவலன் குறிப்பிடுகின்றான்

1. 3

இத்தொடரை நுணுகியாயுங்கால் தமக்கு மிகத்தெளிவாக ஓர் கருத்து கிடைக்கின்றது.

" மறுவின் மங்கல அணியே யன்றியும்
பிறிதணி அணியப் பெற்றதை யெவன்கொல் "

எனக் கேட்பதின் இடையில் ஏகாரம் வந்துள்ளமை குறித்திடத் தக்கது.

அவ்வேகாரத்தால் மங்கல அணியின் மாட்சி விளக்கப்படுவது மட்டுமல்ல.

அது திருமணமான பெண்கள் நிலையாக அணிந்திருக்கும் ஓரணிகலன் எனும் பொருளையும் தந்து நிற்பது குறிப்பிடத்தக்கது. இப்போது கோவலன் புகழ்ந்த உரைக்குப் பொருள் காண்போம்.

" இயல்பான அழகுடைய கண்ணகியே! "

குற்றங்களைத் தவிர்க்கின்ற மங்கல அணி அணிதல் மங்கலப் பெண்டிரின் முறைமை அதனை அணிந்த நிலையிலேயே நீ எல்லோராலும் மதிக்கப் பெறும் மங்கலப் பொலிவினைப் பெற்று விளங்குகின்றாய். வேறு பல்லணிகளை என்ன பயன்கருதி யணிந்தனையோ? என்பதேயாம்.

1:4

இத்தொடர்வழி காவியர், ஓரிய கருத்தினை, நூலறிவார்க்குப் புலனாகும் வண்ணம் குறித்துள்ளார். அது கண்ணகியர் அடைந்த மகிழ்ச்சி, பீடு, சிறப்பு எல்லாம் அவரது மங்கல அணியினாலேயே என்பதாம், எனவேதான் காவியத்தின் தலைமை பெற்ற

கண்ணகியார் ஒருவர்க்கே ஈடுமெடுப்புமற்ற பெரும் புகழைத் தருவ தாக மங்கல அணி விளங்கிற்று என்பதனை

'' மறுவின் மங்கல அணியே யன்றியும்

பிறிதணி அணியப் பெற்றதை யென்கொல்? ''

என அடிகள் வினவுவர்.

மங்கலவணி என்பது கண்ணகியார் அணிந்திருந்த ஓரணி கலன் என்பதும், மணமான பெண்கள் அதனை எந்தகைய வறுமை யிலும் வெறுமையிலும் அணிந்தே சிறந்த சிலப்பதிகாரக்கால வழக் கினையும் கண்ணகியின் கணவன் கோவலன் வாயிலாகவே அடிகள் கூறிச் சென்றனர். அதற்குஆற்றல் சான்ற, மங்கலத் திறத்தினை வெளிப்படுத்தி, பிற ஆடவரைப் பிறர் மனைநோக்காப் பேராண்மை யராக ஆக்கும் திறம் வாய்ந்தது, மங்கல மடந்தையரால் தவிர்க்க வொண்ணாதணி ஓரணிகலனே மங்கலவணி அவ்வணிகலனே ஒரு பெண்ணின் மங்கலத்தன்மைக்கும் உரிய சான்றாக விளங்கியுள்ளது. அம்மங்கலவ அணி பெண்களின் எந்த உறுப்பினை அணி பெறச் செய்தது என்பதனைக் கண்ணகியாரின் தாலி வழி அறியலாகும்.

2: 0

'தாலி' என்ற சொல் தால்+அம் என்ற வேர்மை உடையது, தொங்குதல் என்ற பொருண்மை வாய்ந்தது. மணமான பெண் களின் உடற்பகுதி ஒன்றினை அணிசெய்து ''தொங்குதல்'' தன்மை யோடு திகழ்ந்த அழகிய அணியே தாலியாகும். இப்பொருண்மை வழிகாண மக்கள் அணியும் அணிகளுள் 'தொங்குதல்' வாய்ந்தன வாக: காதணிகளும், மூக்கணிகளும், கழுத்தணிகளுமே விளங்கு கின்றன. இத் 'தாலி, எனும் வகை மங்கலவணி கழுத்தணிவகை யினைச் சேர்ந்ததே எனும் குறிப்பு பின்வருஞ் சான்றால் நிலைபெறு கின்றது.

2: 1

அந்திமாலை சிறப்பு செய் காதையின் ஆழ்ந்து நோக்குமின், கோவலன் மாதவியாற் பிரிந்தான். அவன் பிரிவு ஊரில் அலரெழுப் பிற்று, அவ்வலரும் பிரிவும் கண்ணகியாரை அவலமுறச் செய்தது, கண்ணகியாரின் அவலத் தோற்றத்தினை அடிகள் படம் பிடித்துக் காட்டுகின்றார். தேவு தென்கடல் அமிழ்த்து கொண்டாற்றிய ஓவி யப் புகையுண்டது போலக் கண்ணகியாரின் தோற்றம் விளங்கு கின்றது. இதனை

'' அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்றுகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்

மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குறை துறந்து வடிந்து வீழ்காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர்ப்பு இழய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருக் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையது நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும்

(4: 47—57)

எனுமடிகளில் கரவியர் விளக்கியுள்ளார் திருவடி முதல் தலைமுடி வரை (பாதாதி கேசாந்தமாக) அடிகள் விளக்குகின்றார் விளக்க முறை கீழ்க்காணலாகும் கண்ணகியாரின்

1. அழகிய செம்மையான சிவந்த அடிகள் வேலைப்பாட மைந்த சிலம்புகளை அணியவில்லை.
2. மென் துகிலணிந்த அல்குல் மேகலை அணியாதிருந்தது.
3. கொங்கைகளோ குங்குமத் தொய்யில் எழுதப்பெறவில்லை
4. மங்கல அணி ஒன்றையே விரும்பி அணிந்து இருந்தார். பிற அணிகலன்களை விரும்பவில்லை.
5- வளர்த்த தோள்ளைக்காதுகள் வளைந்த குழைகளைத் துறத்து நீண்டு தொங்கின.
6. நிலவு முகத்தில் சிறு வியர்வைத்துளிகள் இருந்தன,
7; செங்கயற் கண்களில் அஞ்சனம் நீட்டப் பெறவில்லை,
8. பவளநிற ஒளிபெற்ற நுதலில் திலகமில்லை.
9. (இவ்வண்ணம்) முத்துப்போல் சிரிப்பினை உடைய கண்ணகி கோவலனை இழந்து கையற்றிருந்தார்.

திருவடி கூறு சிலம்பில்லை என்றார். அல்குல் கூறி மேகலை இல்லை என்றார். கொங்கை முன்றிலோ குங்குமம் எழுதப்பெற வில்லை என்றார். ஆயின் அடுத்து மங்கல அணி அணிந்திருத்தலைத் தவிர பிற அணிகலன்கள் அணிந்திருத்தலைத் தவிர பிற அணிகலன் களை அணிவதை விரும்பவில்லை, என்றார். அது கொங்கைக்கு மேற் பட்டதாக கூறப்படுதலின் அஃது கழுத்துப்பகுதியாதலை ஓர்க. மேலும். இம்மங்கலவணி அணியப் பெற்ற உடற்பகுதி கழுத்தே என்பதனை அடுத்துக் கூறும், வளர்ந்த காதுகளும், முகமும் பற்றிய செய்திகள் உறுதி செய்கின்றன.

கொங்கைகளின் அவலம் குறித்த அடிகள் அடுத்து குழை யணியப்பெருக் காதுகளைக் குறித்திடுமுன், வியர்வை அரும்பிய

முகத்தினை விளக்கிடுமுன், கொங்கைகட்கும், முகங்காதுகட்கும் இடையே மங்கல அணி அணியப் பெற்ற செய்தியினையும் சுட்டுகின்றனர். இவ்வணியும் யாதானுமோர் உறுப்பில்தானே அணியப் பெற்றிருக்க வேண்டும். பாதாதிகேசாந்த வருணனையில், கொங்கைகட்கும் முகங்காதுகட்கும் இடைப்பட்ட உறுப்பெது? கழுத்துத் தானே! ஆதலின் மங்கலவணியாகிய தாலி கழுத்தில் அணியப் பெற்ற ஓரணிகலனே என்பது ஐயமற்றதன்றே ?

இவ்வணம், கண்ணகியாரின் பாதாதி கேசாந்த வருணனையில்

1) திருவடிகள்	2) அல்குல்	3) கொங்கைகள்
4] கழுத்து	5) காதுகள்	6) முகம்
7) கண்கள்	9) நுதல்	9) கண்ணகிப் - பொலிவு

என ஒன்பது உலுப்புக்களை படிப்படியாக படம் பிடித்துக் காட்டியுள்ள அடிகளின் திறம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது,

மேற் சான்றுகள் வழி இளங்கோவடிகளே அறுதியிட்டுரைக்கும் மங்கலவணி என்பது இன்றளவும் மங்கலப் பெண்டிர் அணிந்திடும் தாலியே என்பதில் தமிழ் கற்றோர்க்கு ஐயமுமெழுமோ?

2: 2

கண்ணகி கோவலன் திருமணத்தினை மங்கல வாழ்த்துப் பாடலிற் கூறுங்கால்

"அகலுள் மங்கல அணி எழுந்தது" என்ற தொடரை அடிகள் படைத்துள்ளார். இத்தொடர்க்கு "ஊரிலே மாங்கல்ய சூத்திரம் வலஞ் செய்தது என அரும்பதவுரைகாரர் உரை கூறுவர்.

"மறுவின் மங்கல அணியே அன்றியும்"

"மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்,,

என்ற இடங்களிலும் மங்கல அணி என்பது தாலியினையே சுட்டிற்று ஆதலின் மங்கல வாழ்த்துப் பாடலின் மங்கலவணி என்பது தாலியேயாகும். மேலும் நுணுகியாய மிகத் தெளிவாக அடிகள், கண்ணகி மங்கல நாண் ஏற்று மங்கல மடந்தையாகும் காட்சியினையும் புலனுக்கியுள்ளமை தெளிவாகின்றது.

[தொடரும்]